TNVR020041692025

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 07-ஆம் நாள் செவ்வாய்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.942/2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>மம்சாபுரம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.165/2024 |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | கணேஷ்குமார்,<br>த/பெ.பால்பாண்டியன்,<br>15 ராமராஜ் நாடார் தெரு,<br>மம்சாபுரம். |
| சம்பவம் நடந்த நாள் | | 18.10.2024 |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 18.10.2024 |
| எதிரி கைதான நாள்<br><br>எதிரி பிணையில் சென்ற நாள் | | 18.10.2024 அன்றே காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 19.06.2026<br><br>இல்லை |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 21.05.2026 |
| குற்றம் | | |
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் |

| | | |
|---|---|---|
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 12.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.2 12.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.3 19.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை |
| எதிரியிடம் BNSS பிரிவு 351(1(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 22.06.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | இல்லை. |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, M.B,.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.R.குனசேகரன், B.Com., B.L,, |
| எதிரியின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கானது 14.08.2025ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 24.03.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, M.B,.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்களான திருR.குனசேகரன், B.Com., B.L,, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கு கடந்த 18.10.2024ம் தேதி 10.00மணிக்கு எதிரி மம்சாபுரம் திருவில்லிபுத்தூர் மெயின் ரோட்டில் உள்ள SPS தேங்காய் பண்ணை அருகில் விற்பனைக்காக அரசு அனுமதியின்றி மதுவுடன் கூடிய சுமார் 180 மிலி அளவுள்ள Mecine Brandy 16 எண்ணம், சுமார் 180 மிலி அளவுள்ள Vorion Brandy 10 எண்ணம் மதுபாட்டில்களை எந்தவிதமான அரசு அனுமதியும் உரிமமோ, இன்றி சுயலாபம் கருதி விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது 4(1)(C) TNP

Amendment Act 2024–ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று மம்சாபுரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் BNSS பிரிவு 230ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்றார். போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரி பொய் வழக்கு, தான் குற்றவாளி இல்லை என மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் விசாரணை செய்து, அ.சாஆ.1 மற்றும் அ.சாஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–

4-(1) அ.சா.1 திரு.காளிராஜன் தனது சாட்சியத்தில், தான் தற்போது மம்சாபுரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், கடந்த 18.10.2024 அன்று காலை 10.00 மணிக்கு 2058 தகா திரு.சவரணக்குமார், சார்பு ஆய்வாளர் பாரதிராஜா மற்றும் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்மந்தமாக மம்சாபுரம் எஸ்பிஎஸ் தேங்காய் பேட்டை அருகே ரோந்து சுற்றி வரும்போது பையில் வெள்ளை பையுடன் பின்னர் கேட்டு பெயர் விலாசம் தெரிந்து கொண்ட கணேஷ்குமார் என்பவர் கையில் வைத்திருந்த வெள்ளை பையை வாங்கி சோதனை செய்தபோது அதில் சுமார் 180 எம்எல் பிடிக்கக்கூடிய மானிட்டர் பிராந்தி 16 எண்ணம் மதுபான பாட்டில்கள், ஓரியன் பிராந்தி 10 எண்ணம் மது பாட்டில்களும் வைத்திருந்தார் என்றும், அரசால் தடைசெய்யப்பட்ட மதுபான பாட்டில்களை வைத்திருந்த குற்றத்திற்காக அவரை அந்த இடத்தில் சார்பு ஆய்வாளர் கைது செய்து அங்கு அத்தாட்சி தயார் செய்து தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் போலீஸ்

பார்ட்டிகளாகிய தாங்களே அத்தாட்சியில் கையொப்பமிட்டு எதிரியை சொத்துக்களுடன் காலை 11.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்ததாகவும், எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அத்தாட்சி அசாஆ.1 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(2) அ.சா.2 திரு.சரவணக்குமார் தனது சாட்சியத்தில், தற்போது மம்சாபுரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 18.10.2024 அன்று தானும், சார்பு ஆய்வாளர் பாரதிராஜா, தகா.1609 காளிராஜ் ஆகியோர் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்து வரும்போது மம்சாபுரம் டு திருவில்லிபுத்தூர் மெயின்ரோட்டில் எஸ்பி எஸ் தேங்காய் பட்டறை அருகில் வெள்ளை பையுடன் நின்றிருந்தவரை பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மம்சாபுரம் ராஜாமணி நாடார் தெருவை சேர்ந்த பல்பாண்டி மகன் கணேஷ்குமார் வயது 37 என்பவர் தங்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை பிடித்து சோதனை செய்தபோது வெள்ளை நிற பையில் 180 எம்எல் அளவுள்ள மெக்லின் பிராந்தி 16 பாட்டில்கள், மற்றும் 180 எம்எல் அளவுள்ள ஓரியன் பிராந்தி 10 பாட்டில்களும் வைத்திருந்தார் என்றும், மேற்படி நபரை அரசு அனுமதியின் மதுபான பாட்டில்களை வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்து அத்தாட்சியின் பேரில் சொத்துக்களை கைப்பற்றி அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே அத்தாட்சியில் கையொப்பமிட்டு மேற்படி நபரை கைது செய்து நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியிலுள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(3) அ.சா.3 திரு.பாரதிராஜா தனது சாட்சியத்தில், தற்போது சங்கரன்கோவில் உட்கோட்டம் பனவடலி சத்திரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 18.10.2024 அன்று மம்சாபுரம் காவல்நலைய சார்பு

ஆய்வாளராக இருந்தபோது மதுவிலக்கு குற்ற தடுப்பு ரோந்து காவலாக காலை 08.00 மணிக்கு காவல்நிலையத்திலிருந்து புறப்பட்டு தானும், தகா1609 காளிராஜன், தகா2058 சரவணன் ஆகியோர் மம்சாபுரம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ரோந்து சுற்றி வரும்போது காலை 10.00 மணிக்கு மம்சாபுரம் திருவில்லிபுத்தூர் மெயின்ரோட்டில் உள்ள எஸ்பிஎஸ் தேங்காய் பட்டறை அருகில் பின்னர் பெயர் விலாசம் தெரிந்த மம்சாபுரம் ராஜாமணி நாடார் தெருவை சேர்ந்த பால்பாண்டியன் மகன் கணேஷ்குமார் வயது 37/24 என்பவர் போலீஸ் பார்ட்டியாகிய தங்களை கண்டதும் நகர்ந்து செல்ல முயன்றவரை நிறுத்தி அவர் கையில் வைத்திருந்த பையை வாங்கி சோதனை செய்ததில் 180 எம்எல் அளவுள்ள ஓரியன் பிராந்தி 10 மதுபான பாட்டில்கள் மற்றும் 180 எம்எல் அளவுள்ள மெக்லேன் பிராந்தி 16 பாட்டில்கள் மேற்படி நபர் அரசால் தடைசெய்யப்பட்ட லாபம் கருதி அரசு மதுபான பாட்டில்களை வைத்திருந்த குற்றத்தினை சொல்லி கையில் வைத்திருநத பாட்டில்களை தனிநபர் யாரும் இல்லாததால் அதே இடத்தில் அத்தாட்சி தயார் செய்து போலீஸ் பார்ட்டிகளாகிய தகா1609 காளிராஜன், தகா2058 சரவணன் ஆகியோர் சாட்சிகளாக அத்தாட்சியில் கையெழுத்து செய்தனர் என்றும், பின்னர் காரணம் கூறி கைது செய்து 11.00 மணிக்கு நிலையம் கொண்டு குற்ற எண்.165/2024 பிரிவு.4(1)(C) TNP Act ன் கீழ் வந்து வழக்கு பதிவு செய்து எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டதாகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 என்றும், மேற்படி போலீஸ் பார்ட்டிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், எதிரியை தக்க இருநபர் பிணையில் விடுவித்ததாகவும், அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை 03.12.2024 அன்று விருதுநகர் மதுவிலக்கு கூடத்தில் அழிப்பதற்காக அனுப்பி வைத்து பின்னர் பாட்டில்களை அழித்து சான்றிதழ் பெறப்பட்டது என்றும், பின்னர் விசாரணையில் எதிரியின் மேற்கண்ட செயல் பிரிவு.4(1)(C) TNP Act பிரகாரம் குற்றம் புரிந்துள்ளார் என்று தெரியவந்தது எனவே எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

5) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரி சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார். இவ்வழக்கில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) தீர்வுக்குரிய பிரச்சனை :–

அரசு தரப்பால் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) கடந்த 18.10.2024 ம் தேதி 10.00 மணிக்கு எதிரி மம்சாபுரம் திருவில்லிபுத்தூர் மெயின் ரோட்டில் உள்ள SPS தேங்காய் பண்ணை அருகில் விற்பனைக்காக அரசு அனுமதியின்றி மதுவுடன் கூடிய சுமார் 180 மிலி அளவுள்ள Mecine Brandy 16 எண்ணம், சுமார் 180 மிலி அளவுள்ள Vorion Brandy 10 எண்ணம் மதுபாட்டில்களை எந்தவிதமான அரசு அனுமதியும் உரிமமோ, இன்றி சுயலாபம் கருதி விற்பனை வைத்திருந்தார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக கூறியுள்ள மதுபாட்டில்களின் பெயர்கள் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதுபாட்டில்களின் பெயர்களிலிருந்து மாறுபட்டு உள்ளதாகவும், எதிரி வைத்திருந்ததாக கூறப்படும் பையானது அத்தாட்சியில் கைப்பற்றப்படவில்லை என்றும், அதனை அ.சா.1 முதல் அசா.3 வரையிலான சாட்சிகள் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், மேற்படி மதுபானபாட்டில்களை

SPS தேங்காய் பண்ணை வாசலில் வெள்ளிக்கிழமை அன்று கைப்பற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி பண்ணையில் வேலை செய்த நபர்களை விசாரணை செய்யவில்லை என்றும், இவ்வழக்கில் 10 மாதங்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி காலதாமதத்திற்கான காரணங்களாக சாட்சிகளால் கூறப்பட்டவை ஏற்றுக்கொள்ளதக்கதாக இல்லை என்றும், எதிரியிடமிருந்து மேற்படி பொருட்களை கைப்பற்றியதாகவும் எதிரியை கைது செய்தததாகவும் கூறப்பட்டுள்ள சங்கதிகளை உறுதிபடுத்தும் வகையில் சாட்சிகள் யாரும் இல்லை என்றும், இவ்வழக்கானது புள்ளிவிபரத்திற்காக பொய்யாக எதிரி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறும் வாதிடப்பட்டது.

10. அ.சா.1 தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் எதிரியை தெரியும் என்றும், கடந்த 18.10.2024 அன்று காலை 10.00 மணிக்கு 2058 தகா திரு.சவரணக்குமார், சார்பு ஆய்வாளர் பாரதிராஜா மற்றும் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்மந்தமாக மம்சாபுரம் எஸ்பிஎஸ் தேங்காய் பேட்டை அருகே ரோந்து சுற்றி வரும்போது கணேஷ்குமார் என்பவர் கையில் வைத்திருந்த வெள்ளை பையை வாங்கி சோதனை செய்தபோது அதில் சுமார் 180 எம்எல் பிடிக்கக்கூடிய மானிட்டர் பிராந்தி 16 எண்ணம் மதுபான பாட்டில்கள், ஓரியன் பிராந்தி 10 எண்ணம் மதுபான பாட்டில்களும் வைத்திருந்தார் என்றும், அரசால் தடைசெய்யப்பட்ட மதுபான பாட்டில்களை வைத்திருந்த குற்றத்திற்காக அவரை அந்த இடத்தில் சார்பு ஆய்வாளர் கைது செய்து அங்கு அத்தாட்சி தயார் செய்து தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே அத்தாட்சியில் கையொப்பமிட்டு எதிரியை சொத்துக்களுடன் காலை 11.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், மேற்படி மானிட்டர் பிராந்தி பாட்டில்களை கைப்பற்றியதாக சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்த போது கூறியுள்ளதாகவும், அத்தாட்சியில் மெக்லைன் பிராந்தி 16 எண்ணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், சம்பவமானது மம்சாபுரம் டூ திருவில்லிபுத்தூர் மெயின் ரோட்டில் உள்ள SPS தேங்காய் பண்ணை அருகில் நடந்ததாக குறிப்பிடப் பட்டுள்ளதாகவும், ஆனால் மேற்படி பண்ணைக்கு எந்த திசையில் நடந்தது என்று குறிப்பிடப்படவில்லை என்றும், அரசு மதுபான கடையின் தெற்கு புறம் மேற்படி தேங்காய் பண்ணை உள்ளதாகவும், மேற்படி தேங்காய் பண்ணையிலிருந்து 100 முதல் 150 அடி தூரத்தில் அரசு மதுபானக்கடை உள்ளதாகவும், சம்பவத்தன்று மேற்படி பண்ணையில் ஊழியர்கள் வேலை செய்யவில்லை என்றும், சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்தில் அந்த சாலையில் போக்குவரத்து மற்றும் ஆட்கள் நடமாட்டம் இருப்பதாகவும், அவர்கள் இவ்வழக்கின் சாட்சிகளாக இருக்க முன்வரவில்லை என்றும், அத்தாட்சியில் எதிரி வைத்திருந்ததாக கூறப்படும் வெள்ளை நிறப் பை குறிப்பிடப்படவில்லை என்றும், மேற்படி சம்பவ இடம் அருகே உள்ள மதுபான கடை அருகில் அங்கீகரிக்கப்பட்ட மதுபான பார் உள்ளதாகவும், அதில் எதிரி வேலை செய்து வருவதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 18.10.2024 அன்று சார்பு ஆய்வாளர் பாரதிராஜா அ.சா.1 மற்றும் தானும் மது விலக்கு சம்பந்தமாக தங்கள் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், ரோந்து சென்ற போது, மம்சாபுரம் டூ திருவில்லிபுத்தூர் மெயின் ரோட்டில் எஸ்பிஎஸ் தேங்காய் பட்டறை அருகில் வெள்ளை பையுடன் பால்பாண்டி மகன் கணேஷ்குமார் என்பவர் ஒரு சாக்கு பையில் பாட்டில்கள் வைத்திருந்ததாகவும், அதில் சுமார் 180 எம்எல் பிடிக்கக்கூடிய மானிட்டர் பிராந்தி 16 எண்ணம் மதுபான பாட்டில்கள், ஓரியன் பிராந்தி 10 எண்ணம் மது பாட்டில்களும் வைத்திருந்தார் என்றும், அரசு அனுமதியின்றி மதுபான பாட்டில்கள் வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்து அத்தாட்சியின் பெயரில் சொத்துக்களை கைப்பற்றி அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே அத்தாட்சியில் கையெழுத்து

செய்து, கைது செய்த நபரை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும் கூறியுள்ளார்.

13. மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், தனது முதல் விசாரணையில் கூறியவாறு வெள்ளை பை அத்தாட்சியில் கைப்பற்றப்படவில்லை என்றும், அதனை கைப்பற்றியதாக குற்ற இறுதி அறிக்கையின் காலம் 10 லும் காட்டப்படவில்லை என்றும், தாங்கள் SPS பண்ணை அருகே வந்த போது எதிரி தங்களை பார்த்து ஓட முயற்சித்ததாகவும், மேற்படி தேங்காய் பண்ணை அமைந்துள்ள இடமானது திருவில்லிபுத்தூர் டூ மம்சாபுரம் செல்லக்கூடிய நெடுஞ்சாலை என்றும், மேற்படி இடமானது பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நிறைந்த பகுதி என்றும், மேற்படி பண்ணைக்கு அருகே 50 மீட்டர் தொலைவில் அரசு மதுபானக்கடை உள்ளதாகவும், அதன் அருகே அரசு அங்கீகரிக்கப்பட்ட மதுபான பார் உள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 18.10.2024 அன்று காலை 10.00 மணி அளவில் அ.சா.1 மற்றும் அ.சா.2 உடன் மதுவிலக்கு சம்பந்தமாக மம்சாபுரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ரோந்து செய்து வரும் போது மம்சாபுரம் டூ திருவில்லிபுத்தூர் மெயின் ரோட்டில் எஸ்பிஎஸ் தேங்காய் பட்டறை அருகில் வெள்ளை பையுடன் பால்பாண்டி மகன் கணேஷ்குமார் என்பவர் நின்று கொண்டிருந்ததாகவும், தங்களை கண்டதும் நகர்ந்து செல்ல முயன்றவரை நிறுத்தி அவர் கையில் வைத்திருந்த பையை வாங்கி சோதனை செய்ததில், 180 எம்எல் அளவுள்ள மெக்லைன் பிராந்தி 16 எண்ணமும், ஓரியன் பிராந்தி மது பாட்டில்கள் 10 எண்ணமும் சுயலாபம் கருதி விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக அவர் கையில் வைத்திருந்த பாட்டில்களை அத்தாட்சி மூலம் கைப்பற்றி சம்பவயிடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே கையெழுத்து செய்ததாகவும், பின்னர் எதிரியை காரணம் கூறி கைது செய்து எதிரி மற்றும் வழக்கு

சொத்துக்களுடன் நிலையம் கொண்டு வந்து எதிரி மீது குற்ற எண்.165/2024 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரியை கைது செய்து தக்க பிணை மூலம் காவல்நிலைய பிணையில் விடுவித்ததாகவும், மேற்படி காவலர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேற்படி கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை 03.12.2024 அன்று விருதுநகர் மதுவிலக்கு கூடத்தில் அழிப்பதற்காக அனுப்பி வைத்து சான்றிதழ் பெற்றதாகவும், பின்னர் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையானது 18.10.2024 அன்று பதிவு செய்யப்பட்டதாகவும், 14.08.2025 அன்று தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளதாகவும், மேற்படி அத்தாட்சியில் எதிரி மதுபான பாட்டில்களை வைத்திருந்ததாக கூறப்படும் வெள்ளை நிற பையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், அசா.1 யை விசாரித்த போது எதிரி 16 மானிட்டர் மதுபான பாட்டில்களை வைத்திருந்ததாக தனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை அ.சா.1 தனது விசாரணையில் கூறவில்லை என்றும், எதிரி மேற்படி SPS தேங்காய் பண்ணை வாசல் முன்பு நின்று கொண்டிருந்ததாகவும், மேற்படி தேங்காய் பண்ணையின் உரிமையாளரையோ, அல்லது வேலை செய்தவர்களையோ சம்பவ சமயத்தில் விசாரணை செய்யவில்லை என்றும், சம்பவ இடமானது திருவில்லிபுத்தூரிலிருந்து மம்சாபுரம் செல்லும் சாலை என்றும், அங்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்தில் நிறைய நபர்கள் சென்று கொண்டிருந்ததாகவும், மேற்படி SPS தேங்காய் பண்ணையிலிருந்து 100 மீட்டர் தொலைவில் அரசு மதுபானக்கடை உள்ளதாகவும், அதன் அருகே அரசால் அங்கீகரிக்கப்பட்ட பார் உள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து, அ.சா.1 தனது சாட்சியத்தில், இவ்வழக்கில் 180 எம்எல் பிடிக்கக் கூடிய மானிட்டர் பிராந்தி 16 எண்ணமும், ஓரியன் பிராந்தி 10 எண்ணமும் கைப்பற்றப்பட்டதாக

கூறியுள்ளார். ஆனால் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை, அத்தாட்சி, குற்ற இறுதி அறிக்கை போன்ற ஆவணங்களையும் மற்ற சாட்சிகளின் சாட்சியங்களையும் ஆராய்கையில் இவ்வழக்கில் 180 எம்.எல் பிடிக்கக் கூடிய மெக்லைன் பிராந்தி 16 எண்ணமும், ஓரியன் பிராந்தி 10 எண்ணமும் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் அத்தாட்சியில் மெக்லைன் பிராந்தி 16 எண்ணம் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி சங்கதிகளிலிருநது இவ்வழக்கில் கைப்பற்றப் பட்டதாக கூறப்படும் வழக்கு சொத்து குறித்தும் அ.சா.1 உண்மையில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் இருந்தாரா என்பது குறித்தும் நியாயமான சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது. மேலும் இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அனைவரும் எதிரி வைத்திருந்தாக கூறப்பட்டுள்ள வெள்ளை நிற பையானது இவ்வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளனர்.

17. மேலும் மேற்படி மதுபானபாட்டில்கள் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே அழிக்கப்பட்டுள்ளது என்பது ஆவணங்களை ஆராய்ந்ததிலிருந்து புலப்படுகிறது. மேலும் இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடமானது பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நிறைந்த பகுதி என்று சாட்சிகளால் கூறப்பட்டுள்ள போதிலும், இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கப்படவில்லை.

18. பொதுவாக குற்றவியல் வழக்குகளில் குற்றம் நடந்த இடத்தை விசாரணை அதிகாரி பார்வையிட்டு அங்குள்ள சூழ்நிலைகளையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் ஆவணப்படுத்துவது புலன் விசாரணை அதிகாரியின் அடிப்படை கடமையாகும். அதுமட்டுமின்றி பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ஆகியவை சம்பவயிடத்தை பற்றிய முக்கியமான பதிவாகும். மேலும் மற்ற சாட்சிகளின் சாட்சியங்களை உறுதிப்படுத்தவும் அவை முக்கியமான ஆவணங்களாக

விளங்குகிறது. ஆனால் இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படாதது இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் குறித்த நியாயமான சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

19. மேலும் இவ்வழக்கின் சம்பவம் நடந்தாக கூறப்படும் 18.10.2024 அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 14.08.2025 அன்று தான் நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி காலதாமதத்திற்கான தகுந்த விளக்கமும் சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் வெளிப்படவில்லை. ஆனால் மேற்படி முதல் தகவல் அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே எதிரி மீது 18.10.2024 அன்றே குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டு 14.08.2025 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

20. மேற்படி சாட்சிகள் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதை கருத்திற்கொண்டும், புலன் விசாரணையிலுள்ள குறைபாடுகளை கருத்திற்கொண்டும், வழக்கின் முக்கிய ஆவணங்களான பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்றவற்றை தயார் செய்யப்படாததை கருத்திற்கொண்டும், இவ்வழக்கில் எதிரியிடமிருந்த கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் வெள்ளை நிறப் பையையும் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படாததை கருத்தில் கொண்டும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படாததைக் கருத்தில் கொண்டும், மேலே விவரிக்கப்பட்ட காரணங்களை கருத்திற்கொண்டும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட வில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

21. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது 4(1)(C) TNP Amendment

Act 2024–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

22. மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 07-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

அ.சா.1 திரு.காளிராஜன்

அ.சா.2 திரு.சரவணக்குமார்

அ.சா.3 திரு.பாரதிராஜா

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

அ.சா.ஆ.1 அத்தாட்சி

அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>** – இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்படவில்லை. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |